1981 ஏப்ரல் 27]

மாநிலங்களின் பாசன அமைச்சர்கள் மகாநாடு

* 901 வினா.—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 நவம்பர் இரண்டாவது வாரத்தில் மாநிலங்களின் பாசன அமைச்சர்கள் மகாநாடு நடைபெற்றுள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மகாநாட்டின் முடிவுகள் பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) ஆம். விவர அறிக்கை * பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, சுமார் 12 பக்கங்கள் கொண்ட அறிக்கையை அமைச்சர் அவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள். நன்றி. மாநில திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று, அதற்கு நிதி ஒதுக்கப்பட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானத்திற்கு மத்திய அரசு ஏதாவது பதில் சொல்லியிருக்கிறதா ? அதோடு மாநிலத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதிலே முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கிறதா ? அதுபற்றி பூரணமாக விவரங்களை தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மாநில திட்டங்களில் பாசனத் துறைக்கு முதலிடம் அளிக்கவேண்டுமென்று பாசனத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். தமிழகத்திலே நம்முடைய மாநிலத் திட்டக் குழு உட்கார்ந்து பேசி 185 கோடி ரூபாய் அளவு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நாம் திட்டங்களை தயாரித்து அனுப்பியிருக்கிறோம். மேலும், தேவைப்படுகிற அந்தத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு மத்திய அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, 185 கோடி ரூபாய் அளவுக்குத் திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்று அவர்கள் சொன்னார்கள். அவைகள் என்ன என்ன ? இதிலே வாரபந்தி என்ற அயிட்டம் இருக்கிறது. அந்த வாரபந்தி நம்முடைய மாநிலத்திலே செயல்படுத்தப்படுகிறதா ? எங்கெங்கு செயல்படுத்தப்படுகிறது ? அவ்வாறு

---

* 321 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

செயல்படுத்தப்படவில்லை என்றால் அவற்றைச் செயல்படுத்தும் முறையில் என்ன ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொதுப்பணித்துறையின் மூலமாக மானியக் கோரிக்கை களை இங்கே வைத்தபொழுது அந்த ஆண்டுத் திட்டங்களைப்பற்றி விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். எனவே, அடுத்த கேள்வியாக, வாரப்பந்தி முறை தமிழகத்தில் அமுல்படுத்தப்படுவதில்லை. ஆனால் இந்த வாரப் பந்தி முறை என்பது சுருக்கமாக ஒரு ஆயக்கட்டுக்கு எவ்வளவு தண்ணீர், எந்தக் கால அளவிற்குக் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயித்துக் கொண்டு, 25 அல்லது 50 ஏக்கருக்கு ஒரு இடத்திலே மதகுகளை வைத்து, தண்ணீரைக் கட்டுப்படுத்த வேண்டும் ; நீர் விரயம் ஆவதை கட்டுப்படுத்த வேண்டு மென்றால் அடிப்படையிலே இந்த முறையிலே பின்பற்றலாம் என்று சொல்லி யிருக்கிறார்கள். அதைக்குறித்து அரசு இப்பொழுது ஆலோசனை செய்து வருகிறது. இனிமேல்தான் இந்த முறையைத் தமிழகத்திலே நாம் அறிமுகம் செய்யவிருக்கிறோம்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, நிறை வேற்றப்பட்ட தீர்மானங்களிலே அணைப் பாதுகாப்பு பற்றிய ஒரு தீர்மானத்தை இந்த மாநாடு நிறைவேற்றியிருக்கிறது. இந்தத் தீர்மானத்தின் படி. பெரியார் அணைக்கான பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டிருக்கிறதா ? அமைத்திருந்தால் அதைத் தமிழக அரசு அமைத்து இருக்கிறதா அல்லது கேரள அரசு அமைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரியார் அணையைப் பொறுத்தவரையில் மத்திய நீர்ப் பாசனக் குழுவே வந்து பார்வையிட்டு, அதிலே எந்தவிதமான ஆபத்தும் இல்லை என்று கருத்துத் தெரிவித்ததற்குப் பிறகும், வேண்டுமானால் அந்த அணையைப் பலப்படுத்தலாம் என்ற ஒரு யோசனையைத் தெரிவித்ததற்குப் பிறகு அவர்களுடைய ஆலோசனையின்படி நம்முடைய பொறியாளர் களுடைய மேற்பார்வையில் கேரள அரசிலே இருக்கக்கூடிய பொறியாளர் களுடைய உதவியோடு இப்பொழுது நாம் அந்த அணையைப் பலப்படுத்தி வருகிறோம். எனவே, அந்தக் குழுவை அமைக்கின்றபொழுது எந்த மாநிலத்திற்கு அது பயன்படுகிறதோ அந்த மாநிலப் பொறியாளர்களை வைத்துத்தான் இந்தக் குழு அமைக்கப்படுமே தவிர மற்ற மாநிலங்கள் அதிலே தலையிடுவதற்கு நாம் அனுமதி அளிப்பதில்லை.

1981 ஏப்ரல் 27]

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் பிரச்னைபற்றி எப்பொழுது பேசப்பட உள்ளது? காவிரி நதிநீர்ப் பங்கீட்டைப்பற்றிய பேச்சுவார்த்தையின் அடுத்த கட்டம் எப்பொழுது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். (விடை இல்லை).

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, அமைச்சருடைய விவரமான அறிக்கை இந்தியா பூராவும் இருக்கும் ஒரு பொதுவான திட்டம் என்ற அடிப்படையில் இருக்கிறது. குறிப்பாக, நம்முடைய மாநிலத்திலே மழை அதிகம் பெய்கின்ற காலத்திலே, வெள்ளம் வரும் காலத்திலே அந்தத் தண்ணீரைத் தேக்கி வைத்து வறட்சி நேரத்தில் பயன்படுத்திக்கொள்ளுகின்ற திட்டம் மிக முக்கியமாக இருக்கிறது. அதை அமல்படுத்தும் முறையில் மாஸ்டர் பிளான் ஒன்றைத் தயாரிக்க அரசு முயற்சித்திருக்கிறதா? தயாரித்திருந்தால் எவ்வளவு விரைவில் அதை அமல் நடத்த முயற்சி செய்யும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாநாட்டிலே இயற்கை நீர் வளத் திட்டம் என்று தீர்மானம் எண் 2-லே நாம் இதை நிறைவேற்றியிருக்கிறோம். இதன்படி ஒவ்வொரு ஆற்றுப் பள்ளத்தாக்கிலும் நீரைத் திருப்பி, தேக்கி வைப்பதற்கான திட்டங்களை மாநில அரசு தயார் செய்து அதற்கு முன்னுரிமை கொடுத்து அந்தத் தண்ணீரைப் பாதுகாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேலும் நாம், வறண்ட காலங்களிலே நீரைப் பயன்படுத்துகின்ற வகையில் மழைக் காலங்களிலே கிடைக்கக்கூடிய உபரியான நீரைத் தனிப்பட்ட முறையிலே புதிய குளங்களையோ அல்லது அணைகளையோ உருவாக்கி வைத்துக் கொள்வதன் மூலமாக நிலத்தடி நீரை நாம் முழு அளவிற்குப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது. Artificial recharge செய்வதற்கு முடியும் என்று கருதி அதை மத்திய திட்டக் குழுவோடு எல்லாம் விவாதித்து அதற்கு முன்னுரிமை கொடுக்கலாமா என்று யோசித்துக்கொண்டு இருக்கிறோம். அதோடு ஒரு நீர்ப்பாசன வாரியம் ஒன்றை அமைத்து இவைகளைத் தனியாக அந்த வாரியத்தினுடைய பொறுப்பில் விடலாமா என்று அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

கோபி தொகுதி தாசம்பாளையம் பிரிவில் பாலம் கட்டும் திட்டம்

*902 வினா.—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ). கோபி தொகுதியில் தாசம்பாளையம் பிரிவு எல்.பி.பி. செட் அருகில் 4/7-விருந்து 5-ல் பாலம் கட்ட திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?